**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 02 - 2021**

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 02 இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 18 ஆம் திகதிய 3625-(எஸ்ஆர்ஐ) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02(அ) உறுப்புரை மற்றும் 3626-(சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02(அ) உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிகழ்ச்சித்திட்டப் பகுதிகளில் விவசாயம் மற்றும் குடிநீர் நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 43,734 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 242 மில்லியனானதுடன் அதில் ரூபா 37,951 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 210 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,783 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. பௌதீக செயலாற்றல்**

**2.1 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யூஈசிபி-ஐசிவிபி-2பி தொகுதி 2021 செப்தெம்பர் 10 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அது 2022 மே 28 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் 70 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது பல்வேறு கொவிட் 19 வைரஸ் பரவியமையினால் நாடு பல தடவை மூடப்பட்டமை மற்றும் ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டமை மற்றும் நாட்டைக் காப்பதற்காக அரசினால் விதிக்கப்பட்ட நடமாடும் வரையறை. | ஒப்பந்த முரண்களை குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வயம்ப வாய்க்காலின் கீழ் மஹகித்துல உள்சுரங்கம், மஹகித்துல மற்றும் மஹகிருல நீர்த்தேக்கம் மற்றும் மஹகித்துல மற்றும் மஹகிருல நீர்த்தேக்கம் முதல் போசிக்கும் கால்வாய் நிர்மாணிப்பதற்கு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 23 சதவீத பௌதீக செயல்முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 03 சதவீத செயல்முன்னேற்றம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது. | மேற்பார்வை மட்டத்தில் சிரேஷ்ட பதவிகளுக்காக தகைமை பெற்ற மற்றும் அனுபவமுள்ள பதவியணியினர் மற்றும் தரக்கட்டுப்பாட்டு பதவியணியினர் காணப்படாமை மற்றும் தொடர்பாடல் இடைவெளி காணப்பட்டமையின் காரணமாக ஒப்பந்தகாரர்கள் சிறப்பாக செயற்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த முரண்களை குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 03 கட்டங்கள் 2018 முதல் 2024 வரை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அதனால் 03 கட்டங்களின் கீழ் ரூபா 74,470 மில்லியன் பெறுமதியான 09 ஒப்பந்தப் பொதிகள் இன்னும் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. அதில் 05 ஒப்பந்த பொதிகள் 2021 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் ரூபா 48 மில்லியன் பொறுப்பு கட்டணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | 03 கட்டங்களை அமுல்படுத்தும் தவணை பணம் செலுத்தும் ஆரம்ப தயாரிப்பின் அடிப்படையில் ஏற்பட்ட அதாவது 02 கட்டங்களில் 75 சதவீதம் மாத்திரம் செலுத்தப்படும் போது 03 கட்டங்களில் அமுல்படுத்தப்பட்டிருந்தமை 2020 நவம்பர் 02 ஆந் திகதி முதல் திசெம்பர் 11 வரை நடைபெற்ற விசேட நிர்வாக செயற்பாடுகள் மற்றும் எய்ட் மெமொரே (யுஐனுநு ஆநஅழசைந) விசேடமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஒப்பந்த முரண்களை குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2019 – 2020 இன் போது அமுல்படுத்துவற்கு திட்டமிடப்பட்ட ஒருங்கிணைந்த நீர் வள முகாமைத்துவத்தை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் மதியுரைச் சேவை (ளுஐறுசுஆ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் அந்த செயற்திட்டம் 2021 செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | தொடர்புடைய தரப்பினர் மற்றும் கடன் வழங்குகின்ற நிறுவத்துடன் நடைபெற்ற கலந்துரையாடல் சுற்றுக்கள் சிலவற்றின் பின்னர் வரவு குறிகாட்டிகளின் பரிசீலனை தற்போது முடிவடைந்துள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் இறுதியின் போது பெறுகைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஆய்வு 2024 ஆம் ஆண்டின் இறுதியின் போது பூர்த்தி செய்யப்படும். | உரிய கால எல்லையின் பிரகாரம் ஆலோசனைச் சேவைகளை தாமதமின்றி அமுல்படுத்து வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |